வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்
ந.க.எண்.2800/அ3/2025 நாள்: 11.08.2025
-----

பொருள்: பள்ளிக்கல்வி – சிறப்புக்கட்டணம் – வேலூர் மாவட்டம் – 2025 –2026ஆம் கல்வியாண்டு – அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் (சுயநிதி பிரிவு தவிர்த்து) உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு சிறப்புக் கட்டணம் இழப்பீட்டுத் தொகை வழங்க ஏதுவாக மாணாக்கர்களின் விவரம் சமர்ப்பிக்கக் கோருதல் – தொடர்பாக.

பார்வை: சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண்.035378/ஐ/இ3/2025, நாள். 17.06.2025.

-----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 2025–2026ஆம் கல்வியாண்டில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்குத் (சுயநிதி பிரிவு தவிர்த்து) தேவைப்படும் சிறப்புக்கட்டண இழப்பீட்டுத் தொகை வழங்க மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பிலுள்ள படிவத்தில் கோரப்பட்டுள்ளது. EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்த மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரத்தினை பதிவிறக்கம் செய்து படிவத்துடன் இணைத்து இவ்வலுவலக அ3 பிரிவில் 13.08.2025 அன்று மாலை 04.00 மணிக்குள் சமர்ப்பிக்குமாறு அனைத்து அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 2024–2025ஆம் கல்வியாண்டில் பயின்ற மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புக் கட்டண இழப்பீட்டு தொகைக்கான பயனீட்டுச் சான்றினை பூர்த்தி செய்து சமர்ப்பிக்குமாறு அனைத்து அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம் .//
முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

இணைப்பு – படிவம் மற்றும்
2024–2025ஆம் ஆண்டிற்கான
பயனீட்டு சான்று

பெறுநர்
தலைமையாசிரியர்கள் அரசு/நகராட்சி/அரசு உதவி பெறும் உயர்/மேல்நிலைப் பள்ளிகள் வேலூர் மாவட்டம்.

நகல் : வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை ) தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.